தினமணி

# இன்றைய வேளாண் செய்திகள்

## தமிழகத்தில் சில இடங்களில் மழைக்கு வாய்ப்பு

தமிழகம், புதுவையில் சில இடங்களில் செவ்வாய்க்கிழமை (டிச.2) மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: மன்னார் வளைகுடா பகுதியில் நிலை கொண்டிருந்த குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி அதே இடத்தில் நீடிக்கிறது. இது காற்றழுத்தத் தாழ்வு நிலையாக வலுவிழந்துள்ளது. இதன் காரணமாக, தமிழகத்தில் மழை படிப்படியாக குறையும். இருந்தபோதும், மேலும் சில நாள்களுக்கு தென் தமிழகத்தில் மழை பெய்யும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். வானிலை முன்னறிவிப்பு: தென் கடலோர தமிழகத்தில் சில இடங்களில் மழையோ, இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்பு உள்ளது. புதுவையில் ஆங்காங்கே மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னையைப் பொருத்தவரை வானம் மேக மூட்டமாகக் காணப்படும். திங்கள்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் ஸ்ரீமுஷ்ணம், பாபநாசம், நாகப்பட்டினம், சீர்காழி, வேதாரண்யம், காரைக்கால் உள்ளிட்ட இடங்களில் மழை பெய்துள்ளது.

## மாவட்டத்தில் பரவலாக சாரல் மழை

தேனி மாவட்டத்தில் திங்கள்கிழமை பரவலாக சாரல் மழை பெய்தது. உத்தமபாளையம் மற்றும் ஆண்டிபட்டியில் அதிக அளவில் 6 மி.மீ., பெய்துள்ளது. வைகை அணை நீர்பிடிப்பில் 2.8 மி.மீ., அரண்மனைப் புதூரில் 5.2, வீரபாண்டியில் 4, கூடலூரில் 2.5, பாப்டியில் 3 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் சராசரி 2.46 மி.மீ., மழை பெய்துள்ளது.

அணைகளின் நீர்மட்டம்: வைகை அணை நீர்மட்டம் 33.10 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 1,803 கன அடி. அணையில் இருந்து விநாடிக்கு 1,560 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. மஞ்சளாறு அணை நீர்மட்டம் 48.50 அடி. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 40 கன அடி. அணையில் இருந்து விநாடிக்கு 100 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. சோத்துப்பாறை அணை நீர்மட்டம், அணையின் முழு நீர்மட்ட உயரமான 126.28 அடி வரை உள்ளது. அணைக்கு நீர்வரத்து மற்றும் அணையில் இருந்து நீர் வெளியேற்றம் விநாடிக்கு 15 கன அடி. பெரியாறு அணை நீர்மட்டம் 137.80 அடி. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 549 கன அடி. அணையில் இருந்து விநாடிக்கு 2000 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. பெரியாறு அணை நீர்பிடிப்பு மற்றும் தேக்கடியில் மழை பெய்யவில்லை.

## <u>தொடரும் மழை: தாமிரவருணியில் வெள்ளப்பெருக்கு</u>

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் நீடிக்கும் மழையால் தாமிரவருணியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. சேர்வலாறு அணையிலிருந்து 1,500 கனஅடி உபரிநீர் திறந்து விடப்பட்டது. தொடரும் மழையால் திருநெல்வேலி மாவட்டத்தில் அணைகள் நிரம்பி வருகின்றன. 156 அடி கொள்ளளவு உள்ள சேர்வலாறு அணை நீர்மட்டம் திங்கள்கிழமை 151.08 அடியை எட்டியது. அணை பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு 150 அடிக்கு மேல் நீரைச் சேமித்துவைக்க முடியாததால் உபரி நீர் தாமிரவருணி ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் தாமிரவருணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மழையளவு: திங்கள்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் பதிவான மழையளவு (மில்லி மீட்டரில்): பாபநாசம் அணை 14, பாபநாசம் கீழ் அணை 3, சேர்வலாறு அணை 11, மணிமுத்தாறு அணை 3.2, கருப்பாநதி அணை 1, குண்டாறு அணை 1.1,

அடவிநயினார் அணை 1, திருநெல்வேலி 0.04, பாளையங்கோட்டை 4, களக்காடு 5.8, அம்பாசமுத்திரம் 3.2, கன்னடியன் அணைக்கட்டு 3, நான்குனேரி 1.5, ராதாபுரம் 1, செங்கோட்டை 1, தென்காசி 1.2, ஆலங்குளம் 4. திங்கள்கிழமையும் மாவட்டத்தில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, அம்பாசமுத்திரம் உள்பட பல்வேறு இடங்களில் திங்கள்கிழமையும் பரவலாக மிதமான மழை பெய்தது. நீர்மட்டம்: 143 அடி கொள்ளளவு கொண்ட பாபநாசம் அணை நீர்மட்டம் 140 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,300 கனஅடி நீர்வரத்து இருந்தது. மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 100.30 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 212 கனஅடி நீர்வரத்து இருந்தது. பிற அணைகள்: கடனாநதி அணை 81.60 அடி, ராமநதி அணை 81.75 அடி, கருப்பாநதி அணை 64.21 அடி, குண்டாறு அணை 36.10, அடவிநயினார் அணை 95.75 அடி, வடக்குப் பச்சையாறு அணை 38.25 அடி, நம்பியாறு அணை 22.96 அடி, கொடுமுடியாறு அணை 52.50 அடி. கடனாநதி அணையில் 110 கனஅடி, ராமநதி அணையில் 40 கனஅடி, கருப்பாநதி, குண்டாறு அணையில் தலா 25 கனஅடி, அடவிநயினார் அணையில் 45 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. தொடரும் வெள்ளம்: தொடர்ந்து நீர்வரத்து காரணமாக மணிமுத்தாறு அருவியில் திங்கள்கிழமையும் வெள்ளம் நீடித்தது. இதனால் சுற்றுலாப் பயணிகள் குளிக்க அனுமதிக்கப்படவில்லை. பாபநாசம் பாணதீர்த்த அருவியில் தொடர்ந்து வெள்ளம் இருப்பதாக மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர். பாபநாசம், சேர்வலாறு அணைகளில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. நிரம்பும் நிலையில் உள்ள பாபநாசம் அணைக்கு தினமும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். இதனிடையே அணைகள் மூடப்பட்டபோதும் திருவைகுண்டம் அணையில் திங்கள்கிழமை காலை நிலவரப்படி விநாடிக்கு 5,000 கனஅடி உபரி நீர் செல்கிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள நீர்வரத்து குளங்கள் நிரம்பி வழிவதால், இந்த உபரி

நீர் வீணாகக் கடலில் கலப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர். **நிரம்பாத பாபநாசம் அணை!** பாபநாசம், சேர்வலாறு அணைகள் அடுத்தடுத்து அமைந்துள்ளன. இவற்றை இணைக்கும் வகையில் சுரங்கப் பாதை (டணல்) உள்ளது. இதனால் இவ்விரு அணைகளின் நீர்மட்டம் ஒரே சீராக உயரும். சேர்வலாறு அணையில் 150 அடிக்கு மேல் நீரைத் தேக்கி வைக்காமல் உபரி நீர் ஆற்றில் திறந்து விடப்படுவதால், பாபநாசம் அணையில் 140 அடிக்கு மேல் நீர்மட்டம் உயர வாய்ப் பில்லாமல் அணைக்கு வரும் நீர்வரத்து சேர்வலாறு அணைக்கு சுரங்கம் வழியே செல்வதால், பாபநாசம் அணை முழுக் கொள்ளளவை எட்ட முடியாத சூழல் இருப்பதாக கூறப்படுகிறது.

## திருத்துறைப்பூண்டியில் 4.2 மி.மீ மழை

திருத்துறைப்பூண்டியில் ஞாயிற்றுக்கிழமை 4.2 மில்லி மீட்டர் மழைப் பெய்துள்ளது. மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருத்துறைப் பூண்டியில் 4.2 மில்லி மீட்டர் மழைப் பெய்துள்ளது. பிற இடங்களில் பெய்த மழையளவு: முத்துப்பேட்டை - 4, நன்னிலம் - 3.2, குடவாசல் - 3.2, திருவாரூர் - 2.4, நீடாமங்கலம் - 2, வலங்கைமான் - 1.6 என்ற அளவில் மழைப் பதிவானது.

## பாலக்கோடு சர்க்கரை ஆலையில் ரூ.71.41 கோடியில் வளர்ச்சிப் பணிகள்

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் ரூ.71.41 கோடியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகளை மாநில தொழில் துறை அமைச்சர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பாலக்கோடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில், ரூ.60.20 கோடியில் கரும்பு சக்கையிலிருந்து மின் உற்பத்தி செய்யும் இணை மின் உற்பத்தித் திட்டம், ரூ.11.21 கோடியில் ஆலையை நவீனப் படுத்தும் திட்டப்

பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகளை தொழில் துறை அமைச்சர் பி.தங்கமணி ஆய்வு செய்தார். பின்னர், கரும்பு ஆலை அலுவலர்கள், இயக்குநர்கள், கரும்பு விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார். புதிய கட்டடம் திறப்பு தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி சுப்பிரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில், ஊரக வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ், ரூ.30 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட கூட்டப் பயிலரங்கு கட்டடத்தை தொழில் துறை அமைச்சர் பி.தங்கமணி, உயர் கல்வித் துறை அமைச்சர் பி.பழனியப்பன் ஆகியோர் திறந்துவைத்தனர். இந்த ஆய்வின் போது, மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன், சர்க்கரை ஆலை மேலாண் இயக்குநர் துர்கா மூர்த்தி, நிர்வாகக் குழுத் தலைவர் கே.வி.ரங்கநாதன், பாலக்கோடு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் கே.பி.அன்பழகன், சுப்பிரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மேலாண் இயக்குநர் ச.கவிதா, ஆலைத் தலைவர் வளர்மதி முருகேசன், நிர்வாக இயக்குநர் சுபா கீரை சம்பத் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## விவசாயிகளின் தோழனாக சுற்றி திரியும் பறவைகள்

பொன்னேரி: நெல் பயிரிடப்பட்டு உள்ள விளை நிலங்களில் உள்ள பூச்சி, புழுக்களை உண்பதற்காக, பறவைகள் கூட்டமாக சுற்றித் திரிகின்றன. நெற்பயிர்களுக்கு கேடு விளைவிக்கும் பூச்சிகளை பறவைகள் உண் பதால், விவசாயிகளின் தோழனாக அவை உள்ளன. விவசாயிகளும் விளை நிலங்களுக்கு பாதுகாப்பு அளித்து, சுற்றித்திரியும் பறவைகளை விரட்டி அடிக்காமல் அன்போடு அரவணைக்கின்றனர். பொன்னேரி அடுத்த மெதுார், வேம்பேடு, ஆவூர் உள்ளிட்ட இடங்களில், விளை

நிலங்களில் சம்பா சாகுபடிக்கு நெல் பயிரிடப்பட்டு உள்ளது. அங்கு, கொக்கு, நாரை உள்ளிட்ட பறவைகள் கூட்டம் கூட்டமாக சுற்றித் திரிகின்றன. விளை நிலங்களில் இருக்கும் பூச்சிகளையும், நீர் நிலைகளில் உள்ள சிறு மீன், மண்புழு உள்ளிட்டவைகளையும், உணவாக உட் கொண்டு வாழ்கின்றன. பறவைகள் விளை நிலங்களில் சுற்றி வருவதை பார்க்க மிகவும் பரவசமாக உள்ளது.

## மரக்காணத்தில் 5 மி.மீ., மழை

விழுப்புரம்: விழுப்புரம் மாவட்டத்தில் மரக்காணம் உள்ளிட்ட சில பகுதிகளில் 5 மி.மீ., மழை பதிவானது. விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் பரவலான மழை பெய்தது. விழுப்புரத்தில் 2 மி.மீ., மழை அளவு, உளுந்தூர்பேட்டையில் 5 மி.மீ., வானூரில் 4 மி.மீ., மற்றும் மரக்காணத்தில் 5 மி.மீ., மழை அளவும் பதிவானது. மாவட்டத்தில் மொத்தம் 16 மி.மீ., அளவு மழை பெய்தது.

## மூலிகை பண்ணை அமைக்க விவசாயிகள் வலியுறுத்தல்

கிருஷ்ணகிரி: வைரஸ் காய்ச்சலை தடுக்க, அரசு மருத்துவமனைகளில் மூலிகை சாறை இலவசமாக அரசு வழங்கி வரும் நிலையில், கிருஷ்ணகிரி மாவட்ட வனப்பகுதியில் கிடைக்கும் அரிய வகை மூலிகை தாவரங்களை விற்பனை செய்ய, கிருஷ்ணகிரியில் மூலிகை கொள்முதல் மையம் அமைக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்ட மொத்த பரப்பான, 5 லட்சத்து 14 ஆயிரத்து, 326 ஹெக்டேரில், 2 லட்சத்து, 2,409 ஹெக்டேரில் வனங்கள் உள்ளது. இதில், வனத்திலும் மற்றும் வனம் சார்ந்த மலை மற்றும் கிராம பகுதிகளில் அரிய வகை மூலிகைகள் அதிகம் கிடைக்கிறது. குறிப்பாக, மலை வேம்பு, நில வேம்பு, சிறு குறிச்சான், ஆடுமுட்டான், சித்திரை மூலம், துளசி, வல்லாரை, பொன்னாங்கன்னி உள்பட, 75க்கும் மேற்பட்ட மூலிகை தாவரங்கள் காட்டுப்பகுதியில் அதிகம் கிடைக்கிறது. வைரஸ் காய்ச்சல்

பரவி வரும் நிலையிலும், கிராம புறத்தில் உள்ளவர்கள் மூலிகை தாவரங்களை கொண்டு வைத்தியம் பார்த்துக் கொள்கின்றனர். வனப்பகுதியில் சாதாரணமாக கிடைக்கும் வேம்பு, ஆடுதோடா, செம்பருத்தி, காட்டுக்கத்திரி, காசினியா, சோற்றுக்கற்றாழை போன்ற மூலிகை தாவரங்களை வனத்தை ஒட்டியுள்ள பகுதியில் வசிக்கும் கிராம மக்கள் மருத்துவத்துக்கு அதிகம் பயன்படுத்துகின்றனர். மருத்துவ குணம் கொண்ட அரிய வகை மூலிகை பயிர்களை கிராம பகுதிகளில் உள்ளவர்களிடம், கிருஷ்ணகிரியை சேர்ந்த வியாபாரிகள் வாங்கி, அதை வெயிலில் உலர்த்தி விற்பனை செய்கின்றனர். இவ்வாறு விற்பனை செய்யப்படும், அரிய வகை மூலிகைகளுக்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளது. குறிப்பாக ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து, ஜெர்மன் நாடுகளுக்கு கிருஷ்ணகிரியில் இருந்து கிடைக்கும் மூலிகை பயிர்கள் அதிகளவு விற்பனைக்கு செல்கிறது. தமிழகத்தில், பரவி வரும் வைரஸ் காய்சலை தடுக்க அரசு மருத்துவமனைகளில் பப்பாளி சாறு, மலைவேம்பு சாறு, நில வேம்பு சாறு போன்ற மூலிகை சாற்றை தமிழக அரசு இலவசமாக வழங்கி வருகிறது. இது போன்ற மூலிகைகள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிகம் கிடைக்கிறது. மேலும், மலையோர விவசாயிகள் பல்வேறு மூலிகை பயிர்களை சாகுபடி செய்கின்றனர். இவ்வாறு பயிரிடப்படும் மூலிகை பயிர்களை விற்பனை செய்வதில் பல்வேறு சிரமங்கள் உள்ளதால், கிருஷ்ணகிரியில் அரசு மூலிகை கொள்முதல் மையத்தை தொடங்க வேண்டும், என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## <u>தேசிய தோட்டக்கலை இயக்கக அதிகாரிகள் ஆய்வு இன்று துவக்கம்</u>

ஊட்டி : நீலகிரி மாவட்டத்தில், தேசிய தோட்டக்கலை இயக்கக அதிகாரிகள், ஆய்வு மேற்கொள்ள உள்ளனர். நீலகிரி மாவட்டத்தில், தோட்டக்கலை துறை சார்பில், பூங்காக்கள் பராமரிப்பு, புதிய பூங்காவை அமைத்தல் உட்பட சுற்றுலா சார்ந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு

வருகின்றன. தவிர, விவசாயப் பொருட்களின் உற்பத்தியை பெருக்க, விதை, உரம் மற்றும் விவசாயம் சார்ந்த உபகரணங்கள், மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கு, தேசிய தோட்டக்கலை இயக்ககத்தின் கீழ், பல கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது. இந்நிதி யின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை பார்வையிட, தேசிய தோட்டக்கலை இயக்கக அதிகாரிகள், நாளை ஊட்டி வருகின்றனர். ஊட்டி தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, குன்னூர் சிம்ஸ்பூங்கா என, தோட்டக்கலை துறை சார்பில் பராமரிக்கப்பட்டு வரும் சுற்றுலா ஸ்தலங்கள் மற்றும் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாய மேம்பாட்டு பணிகளை ஆய்வு செய்ய உள்ளனர்.

## அரியவகை பூஞ்சான்; மாணவர்கள் ஆராய்ச்சி

குன்னூர் : குன்னூர் சிம்ஸ் பூங்காவில் உள்ள மரம், கடந்த சில மாதங்களுக்கு முன்பு இடிதாக்கி கருகியது. அதில், கடந்த 'பிராக்கெட் பங்கி' என அழைக்கப்படும் பூஞ்சான் மெகா சைசில் வளர்ந்துள்ளது.இது தொடர்பான செய்தி 'தினமலர் நாளிதழில், கடந்த மாதம் 27ம் தேதி வெளியானது. இதனை அறிந்த, கோவை வேளாண் பல்கலைக்கழக காளான் வளர்ப்பு பிரிவு துறை தலைவர் கிருஷ்ணமூர்த்தி, குன்னூர் தோட்டக்கலை அதிகாரிகளை தொடர்பு கொண்டு, 'அந்த பூஞ்சான் அரிய வகையை சேர்ந்தது' என, தெரிவித்துள்ளார். மேலும், கல்லூரியை சேர்ந்த இரு மாணவர்கள் நேரில் வந்து, அந்த பூஞ்சானை ஆய்வுக்காக எடுத்து சென்றுள்ளனர்.

## சமூக காடுகள் ஏலம்

அரியலூர்: அரியலூர் மாவட்ட வன அலுவலகத்தில், சமூக காடுகள் ஏலம் விடப்பட்டது. அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அருகே பிராஞ்சேரியில் உள்ள அத்திக்குட்டை ஓடை, சிறுவளூர் படுகையில் உள்ள தைலமரங்கள், அருங்கால் கிராமத்தில் வண்டாரான் ஏரியில்

உள்ள வேலி கருவை மரங்கள், சன்னாவூர் ஆண்டி ஓடையில் உள்ள கருவேல மரங்கள், மரவனூர் ஏரியில் உள்ள வேலிகருவை மரங்கள், கீழப்பழுவூர் செங்குளம் மற்றும் கருங்குளம் ஏரியில் உள்ள கருவேல் மரங்கள், குழுமூர் ஏரியில் உள்ள வேலிகருவை மரங்கள், நல்லநாயகபுரம் கிராமத்தில் உள்ள கருவேல் மரங்கள் உள்பட வனத்துறைக்கு சொந்த மான, 15 இடங்களில் சமூக காடுகள் திட்டத்தில் வளர்க்கப்பட்ட மரங்களை வெட்டுவதற்கான ஏலம், அரியலூர் மாவட்ட வன அலுவலகத்தில் நடைபெற்றது. அரியலூர் மாவட்ட வன அலுவலர் சத்தியமூர்த்தி மேற்பார்வையில் நடந்த ஏலத்தில், பஞ்சாயத்து தலைவர்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள் பலரும் பங்கேற்றனர்.

## குமரியில் தொடர்மழை; அணைகளில் கூடுதல் தண்ணீர் வெளியேற்றம்

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக அணைகளும் அதன் முழு கொள்ளவை எட்டும் வந்துள்ளது, 48 அடி கொள்ளவு கொண்ட பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் நேற்று காலை 45.57 அடியாக இருந்தது. அணைக்கு 291 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. 103 கன அடி தண்ணீர் வெளியேற்றப் படுகிறது. 77 அடி கொள்ளவு கொண்ட பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் நேற்று காலை 75.14 அடியாக இருந்தது. அணைக்கு 716 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. 356 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணைகளின் நீர் மட்டம் அதன் முழு கொள்ளளவை எட்டும் நிலையில் உள்ளதால் பொதுப்பணித்துறை அதிகாரிகள் அணைப்பகுதியில் முகாமிட்டு நிலைமையை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். தொடர் மழையால் திற்பரப்பு அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. தொடர் மழையால் ஈசாந்திமங்கலம் பகுதியை வெள்ளம் சூழ்ந்துள்ளது.

## <u>தொடர் மழையால் நெற்பயிரில் பூச்சிகள்</u>

தேவகோட்டை : தேவகோட்டை தாலுகாவில் தொடர்ந்து மழை பெய்து வந்ததால் இந்த ஆண்டு விவசாயம் செழிப்பாக இருக்கும் என விவசாயி கள் மகிழ்ச்சியாக இருந்தனர். உரம் உட்பட விலை இரு மடங்கு விற்றாலும் விவசாயிகள் விவசாயவேலைகளை செய்தனர். கடந்த சில தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதாலும்,வெயில் இல்லாமல் ஈரமாக இருப்பதாலும் இலை சுருட்டு புழு உட்பட பலவித நோய் தாக்கியுள்ளதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர். விவசாயி ஜோசப் கூறியதாவது: இரண்டாண்டுகளாக மழை பெய்யாமல் ஏமாற்றிய நிலையில் தற்போது மழை தற்போது தொடர்ந்து பெய்து கெடுத்து விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. யூரியா இரு மடங்கு விலை கொடுத்து வாங்கி தெளித்தோம். அதே போல் பூச்சி மருந்தும் விலை கூடியுள்ளது. உரம் ,பூச்சி மருந்து வெளியே தான் விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது, என்றார்.

**தினகரன்**

### இன்றைய வேளாண் செய்திகள்

## <u>அதிகாலை கடும் குளிர் உழவர்சந்தையில் விற்பனை நேரம் நீட்டிப்பு</u>

கோவை, : கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தைக்கு அதிகாலை 5 மணிக்கு வரும் வாடிக்கையாளர்கள் கடும் குளிர் காரணமாக 7 மணிக்கு வருகின்றனர். இதனால் விற்பனை நேரம் 11 மணி வரை நீட்டிக்கப் பட்டுள்ளது. கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை காலை 4 மணிக்கு திறக்கப்படுகிறது. 10 மணிக்கு மூடப்படுகிறது. பெரியநாயக்கன் பாளைம், தொண்டாமுத்தூர், மதுக்கரை பகுதிகளை சேர்ந்த 150 விவசாயிகள் காய்கறிகள் கொண்டு வருகின்றனர். தினசரி 5 ஆயிரத்திற்கு

மேற்பட்டோர் காலை 5 மணி முதல் 7 மணிக்குள்ளும், 3 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் 9 மணிக்குள் வந்து காய்கறிகளை வாங்கி செல்வது வழக்கம். அப்போது சராசரியாக 80 டன் காய்கறிகள், ரூ.17 லட்சத்திற்கு விற்பனையாகும். இந்நிலையில் கடந்த சில நாட்களாக அதிகாலையில் கடும் குளிர் நிலவுவதால் உழவர் சந்தைக்கு வரும் மக்கள் தாமதமாக வருகின்றனர். இதனால், கடந்த சில நாட்களாக விற்பனை நேரம் 11 மணி வரை நடக்கிறது. இதனால் விவசாயிகளும் தங்களது விற்பனை நேரத்தை 11 மணி வரை நீட்டித்துள்ளனர்.

## துவரங்குறிச்சி அருகே புதிய பால் பண்ணை துவக்கம்

துவரங்குறிச்சி, : துவரங்குறிச்சி அருகே உள்ள ஊனையூரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ மகாலெட்சுமி பால் பண்ணை துவக்க விழா நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற காப்பகுடி ஊரார் வேலுச்சாமி, புதிய பால் பண்ணையில் விற்பனையைத் திறந்துவைத்துப் பேசினார். பால் பண்ணையை ஆரம்பத்துள்ள திமுகவைச் சேர்ந்த முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஊனையூர் பழனியாண்டி கூறுகையில், லிட்டருக்கு ரூ. 31 வீதம் கால்நடை விவசாயிகளிடம் இருந்து பால் கொள்முதல் செய்யப்படும் என்றும், ரூ.32 வீதம் சில்லறை விலையில் விற்கப்படும், மேலும், கொள்முதலுக்கான தொகை அன்று மாலையே வழங்கப்படும். 2 மடங்கு போனஸ் மற்றும் பால் மாடுகளுக்கு இன்சூரன்ஸ் செய்து கொடுக்கப்படும் என்றார்.

## பயறுகளில் சிவப்பு கம்பளிப்பூச்சி தாக்குதல் தடுக்க வேளாண் உதவி இயக்குநர் ஆலோசனை

பழநி, : பயறு வகை களில் சிவப்பு கம்பளி பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த வேளாண் உதவி இயக்குநர் சாந்தாமணி ஆலோசனை வழங்கி உள்ளார். பழநி வட்டாரத்தில் வடகிழக்கு பருவ மழையை பயன்படுத்தி அனைத்து பகுதிகளிலும் பயறு வகை களான உளுந்து,

தட்டை போன்ற பயறு வகைகள் சுமார் 1000 ஏக்கர் அளவில் மானாவாரியாக சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. இப்பயிர்களில் சிவப்பு கம்பளி புழுக்களின் தாக் குதல் ஆங்காங்கே பரவ லாக காணப்படுகிறது. சிவப்பு கம்பளி பூச்சியானது அதிகளவில் நிலக்கடலை பயிரை மட்டுமே தாக்கும். ஆனால், கடந்த 2 வருடங்களாக நிலக்கடலை சாகு படி பரப்பு குறைந்து விட் டது. மற்ற பயறு வகைகளின் சாகுபடியும் அதிகளவில் இல்லை. இதனால் தற்போது பயிரிடப்பட்டுள்ள அனைத்து பயறு வகைகளிலும் இப்பூச்சியின் தாக்குதல் அதிகளவு உள்ளது. குறிப்பாக பயறு வகை களான உளுந்து மற்றும் தட்டைப் பயறுகளில் இதன் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இப்பூச்சியானது இலைகள் அனைத்தையும் வேகமாக தின்று தண்டு களை மட்டுமே விட்டு வைக்கிறது. மேலும், இது வேகமாக பரவக்கூடிய தன்மை உடையது. ஆழ மாக உழவு செய்வதால், மண்ணின் கீழே தங்கி உள்ள கூட்டுப் புழுக்கள் மேலே கொண்டு வரப்பட்டு பறவைகளால் அழிக்கப் படுகின்றன. ஊடு பயிராக அல்லது வரப்பை சுற்றி 5 அல்லது 6 வரிசைகள் ஆமணுக்கு செடிகளை நட வேண்டும். சோளம், மாக்காச்சோளம் ஆகிய பயிர்களை சுழற்சி முறையில் சாகுபடி செய்ய வேண்டும். விதைத்த பின் தொட ர்ந்து வறட்சி காணப்படும் போது, இப்பூச்சியின் தாக்குதல் அதிகரிக்கும். அதனால் மண்ணின் தன்மையைப் பொறுத்து நீர்ப்பாசனம் செய்து பூச்சி யின் தாக்குதலைக் கட்டுப் படுத்தலாம். ஆங்காங்கே காணப்படும் வளர்ந்த புழுக்கள் மற்றும் முட்டை குவியல்களை சேகரித்து அழிக்கலாம். வயல்களில் ஆங்காங்கே பறவைகள் அமர்வு குச்சிகள் வைக்கலாம். விதைத்த 15 நாட்களுக் குள் களை நிர்வாகம் செய்யப்பட வேண்டும். என். பி.வி அல்லது நுண்ணுயிர் கொல்லிகளை பி.டி தெளிக்கலாம். மேற்கண்ட ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளுடன் பூச்சிக் கொ ல்லி மருந்துகள் கார்பரில் 50% அல்லது எக்டேருக்கு குயிலைபாஸ் 1500 மில்லி அல்லது எக்டேருக்கு நூ

லான் 500 மில்லி இவற்றில் ஏதேனும் ஒன்றை தெளித்து கட்டுப்படுத்த லாம் என்று வேளாண் உதவி இயக்குநர் சாந்தா மணி தெரிவித்துள்ளார்.

## 3 கிலோ கோழிக்கறி ரூ.200க்கு விற்பனை

கரூர், : கரூர் வெங்கமேட்டில் கோழிக்கறி அதிரடியாக விலை குறைத்த விற்பனை செய்யப்பட்டது. கரூர் வெங்கமேட்டில் ஞாயிறன்று கோழி, இறைச்சி, மீன் உணவுகள் அதிக அளவில் விற்பனை செய்யப்படும். விடுமுறை மற்றும் பண்டிகை நாட்களில் கூடுதல் கடைகள் போடப்பட்டு இறைச்சி விற்பனை நடைபெறும். நேற்று விடுமுறைநாளன்று சில சிக்கன் விற்பனை கடைகளில் அதிரடியாக விலை குறைத்து விற்பனை செய்தனர். ஒரு கிலோ கோழிக்கறி ரூ.100 எனவும், 3 கிலோவாக வாங்கினால் 200 ரூபாய்க்கும் விற்பனை செய்தனர். இதனால் ஏராளமானோர் கோழிக்கறி வாங்குவதற்காக கடைகளில் குவிந்தனர். கூட்டம் அதிகமானதால் வரிசையில் நின்று கோழிக்கறியை வாங்கிச் சென்றனர். கரூர் நகரில் காந்திகிராமம், பசுபதிபாளையம், தாந்தோணிமலை போன்ற பகுதிகளில் விலை குறைப்பு செய்யப்படவில்லை. வெங்கமேடு பகுதிகளில் மட்டும் குறைந்த விலையில் கோழிக்கறி விற்பனையானது.

## கம்பம் பகுதியில் மீண்டும் தொடங்கியது வெங்காய அறுவடை

கம்பம், : கம்பம் பகுதியில் மழை குறைந்ததால் மீண்டும் வெங்காய அறுவடை பணி துவங்கியுள்ளது. கம்பம், கூடலூர், காமயகவுண்டன் பட்டி, நாராயணத்தேவன்பட்டி, சுருளிப்பட்டி, அணைப்பட்டி உள் ளிட்ட பகுதிகளில் சின்ன வெங்காயம் அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக பெய்த தொடர் மழையால் விவசாயிகள் வெங்காயத்தை அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில் தற்போது மழை குறைந்துள்ளதால் இப்பகுதிகளில் சின்ன வெங்காயம் அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். கடந்த மாதம் கிலோ ரூ.10க்கு விற்பனை செய்யப்பட்ட

சின்ன வெங் காயம், தற்போது வரத்து குறைவின் காரணமாக கிலோ ரூ. 20 வரை விற் பனை செய்யப்பட்டு வருகிறது. இது குறித்து விவசாயி மணிமாறன் கூறுகையில், "கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த தொடர் மழை மற்றும் பனியின் காரண மாக தற்போது சின்ன வெங்காயம் வரத்து குறைந்துள்ளது. சாதாரணமாக ஏக்கருக்கு 6000 கிலோ விளையும் நிலங்களில் 3000 கிலோ வரை மட்டுமே அறு வடை செய்ய முடிகிறது. தற்போது மொத்த வியாபாரிகள் கிலோ ரூ. 20 வரை கொள்முதல் செய்கின்றனர். கிலோ ரூ. 25 முதல் 30 வரை விற்பனை செய்தால் மட்டுமே விவசாயிகளுக்கு போதிய லாபம் கிடைக்கும்" என்றனர்.

## <u>போடியில் தொடர்மழை</u>

போடி, : போடியில் நேற்று அதிகாலை மூன்று மணிநேரம் விடாமல் மழை பெய்தது. இதனால் பொதுமக்கள் தங்கள் அன்றாட பணியை மேற் கொள்ள முடியாமல் வீட்டிலேயே முடங்கி கிடந்தனர். வங்கக்கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகம் முழுவதும் கடந்த 3 நாட்க ளாக மழை பெய்து வருகி றது. போடி மற்றும் அதை சுற்றியுள்ள கொட்டகுடி, தேவாரம், மீனாட்சிபுரம், சிலமலை உள்ளிட்ட பகுதிகளில் நேற்று அதிகாலை 7 மணியிலிருந்து தொடர்ந்து மூன்று மணி நேரம் மழை பெய்தது. இதனால் பொதுமக்கள் தங்கள் அன்றாட பணிகளை மேற்கொள்ள முடியாமல் வீட்டிற்குள்ளேயே முடங்கிகிடந்தனர். ஆனால் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தங்கள் பணிகளை மேற்கொண்டு வருகின்றறர். மானாவாரி பயிர்களை பயிரிட துவங்கியுள்ளனர்.

## <u>புகையான் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த வழிமுறை</u>

தேனி, : சம்பா மற்றும் தாளடியில் புகையான் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து வேளாண் அதிகாரிகள் ஆலோனை தெரிவித்துள்ளனர். இது குறித்து அவர்கள் கூறுகையில், முதலில் வயலில் இருந்து தண்ணீரை வடிக்க வேண்டும். முதிர்ந்த பயிராக இருப்பின்

பட்டம் பிரிந்து சூரிய வெளிச்சம் மற்றும் காற்றோட்டத்தை அதிகப்படுத்த வேண்டும். வயலில் எப்போதும் நீர் மறைய நீர் கட்டி வர வேண்டும். ஏக்கருக்கு பரிந்துரைக்கப்படும் மேலுரமாக 22 கிலோ யூரியா உரத்திற்கு மேல் எக்காரணம் கொண்டும் இடக்கூடாது. புகையான் நடமாட்டம் அதிகமாக தென்படும் இடங்களில் தழைச்சத்து கொடுக்கவல்ல யூரியா உரத்தை மேலுரமாக இடா மல் இருப்பதே நல்லது. மேலும் புகையான் பூச்சிகளின் மறுபெருக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ரசாயன பூச்சிக்கொல்லிகளை கண்டிப்பாக தெளிக்கக்கூடாது. புகையான் பூச்சிகளின் தாக்குதலை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு அசாடிராக்டின் 500மிலி அல்லது இமிடாகுளேபிரிட் 100 மிலி அல்லது அசிபேட் 250 கிராம் அல்லது தயாமிக்தாஸின் 100 கிராம் இவற்றில் ஏதேனும் ஒரு பூச்சி கொல்லி மருந்தினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தூரின் அடிப்பகுதியில் நன்கு நனையும்படி பூ நாசில் பயன்படுத்தி தெளிக்க வேண்டும் என தெரிவித்தனர்.

**<u>நிலக்கடலையில் கம்பளி புழுக்களை கட்டுப்படுத்த ஆலோசனை</u>**

திருச்சுழி, : கம்பளிப் புழுக்களை கட்டுப்படுத்துவது குறித்து வேளாண் துறை அதிகாரிகள் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி உள்ளனர். இது குறித்து வேளாண் அதிகாரிகள் வெளியிட்டு ள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது: திருச்சுழி மற்றும் நரிக் குடி பகுதிகளில் ஏராள மான ஏக்கரில் நிலக்கடலை பயிரிடப்பட்டுள்ளன. இப்பயிர்களில் தற்போது சிவப்பு கம்பளிப்புழு அதிகளவில் தென்படுவதால் அதனை கட்டுப் படுத்தும் முறை களை வே ளாண் அதிகாரி கள் ஆலோசனை வழங்கி வருகின்றனர். கோடை மழைக்குப் பின்னர் வரப்புகளிலும், நிழல் படிந்த இடங்களிலும் உள்ள பேரீச்சம்பழ கொட் டை போல் தென்படும் கூட்டுப்புழுக்களை பொ று க்கி அழிக்க வேண்டும். கோ டை உழவின் போது வெளி ப்படும் கூட்டுப்புழுக்களை பறவைகள் கொத்தி அழித்துவிடும். நிலக்கடலை செடி யாக இருக்கும் பொ ழுது மழை பெய்தவுடன் விளக் குப் பொறி வைத்தும், சொக்கப்பான் கொளுத்தி யும் தாய் அந்துப்பூச்சிகளை அழிக்கலாம். இலைகளில் தென்படும் முட்டைக்

குவியல் களை அப்புறப்படுத்தி அழித்துவிட வேண்டும். துவரை, தட்டைப்பயறு போன்ற ஊடுபயிரில் தென் படும் இளம்புழுக்களை செடியுடன் பிடுங்கி அழித்துவிட வேண்டும். இளம் புழுக்களாக இருக்கும் பொ ழுதே எக்டேருக்கு குயின ல்பாஸ் 1250மிலி. அல்லது குளோர் பைரி பாஸ் 1250 மிலி அல்லது பெனிட் ரோதியான் 750 மிலி பூச்சிக்கொல்லி மருந்துகளை நிலக்கடலை சாகுபடி செய்துள்ள அனைத்து விவசாயிகளும் தவறாது தெளிக்க வேண்டும். மேலும், தொழில்நுட்ப விபரங்களுக்கு எம்.ரெட்டியபட்டி, வேளாண்மை விரி வாக்க மையம் (04566 284585) என்ற எண்ணில் அணுகலாம்.

## <u>கடைமடை பகுதியில் 50 அடியை நெருங்கும் நிலத்தடி நீர்மட்டம்</u>

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் கடைமடை பகுதியில் 2 ஆண்டுகளுக்கு பிறகு 50 அடியை நிலத்தடி நீர்மட்டம் நெருங்கியுள்ளது. சேதுபாவாசத்திரம் கடைமடை பகுதியில் கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக பருவமழை வஞ்சித்துவிட்டது. இதனால் பல்வேறு இடங்களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. ஒரு சில இடங்களில் ஆழ்குழாய் கிணறு கள் முழுமையாக வறண்டு விட்டது. கடந்த 3 ஆண்டுகளாக எந்த ஒரு ஏரியும் நிரம்பவில்லை. இந்தாண்டு கடைமடை பகுதியில் பருவமழை துவங்கிய நாள் முதல் கடைமடை பகுதியில் நல்ல மழை பெய்து 100க்கும் மேற்பட்ட சிறிய ஏரிகள் நிரம்பியுள்ளது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து 50 அடியை நெருங்கியுள்ளது. அதேநேரம் 1,000 ஏக்கருக்கு மேல் பாசனம் தரக்கூடிய நாடியம், ஊமத்தநாடு, விளங்குளம், சோலைக்காடு, பெருமகளூர், கொரட்டூர் போன்ற பெரிய ஏரிகள் இதுவரை முழு கொள்ளளவை எட்டவில்லை. தற்போது வங்கக்கடலில் உருவான புயல் சின்னம் காரணமாக கடந்த 28ம் தேதி இரவு மட்டுமே கடைமடை பகுதியில் மழை பெய்துள்ளது. கடந்த 2 நாட்களாக மழையின்றி வெறும் மேகமூட்டமாகவே காணப்படுகிறது. இன்னும் 2

நாட்களுக்கு மேல் மழை பெய்தால் தான் பெரிய ஏரிகள் முழு கொள்ளளவை எட்டும்.

## நெற்பயிரில் புகையான் நோய் தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி?

பரமக்குடி, : நெற்பயிரில் புகையான் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து வேளாண்துறை அதிகாரிகள் ஆலோனை தெரிவித்துள்ளனர். இது குறித்து அவர்கள் கூறியது: தற்போது பகல் நேர வெப்பம் குறைந்து, மப்பும் மந்தாரத்துடன் கூடிய குளிர்ச்சியான சூழ்நிலையும், அவ்வப்போது மிகக்குறைவான அளவில் தூறலும், இரவில் அதிக குளிருடன் பனிப்பொழிவும் காணப்படுகிறது. இதனால் கதிர் வெளிவரும் தருணம் முதல் கதிர் வெளிவந்து பூப்பூக்கும் தருணம் வரை நெற்பயிர்களில் புகையான் பூச்சிகளின் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. புகையான் பூச்சிகள் நெற்பயிர்களின் தூர்களின் அடிப்பகுதியில் நீர் மட்டத்திற்கு மேல் இருந்துகொண்டு, பயிரின் சாற்றை உறிஞ்சுவதால் பயிர்கள் சிவந்து இலைகள் மற்றும் தூர்கள் முழுவதுமாக காய்ந்துவிடும். கதிர்களில் பால்பிடித்து மாவுச்சத்து சேர்க்கப்படாமலேயே மணிகள் முற்றிலுமாக பதராக மாறிவிடும். நோய் தாக்குதல் மிகவும் அதிகமானால் பயிர்கள் கட்டி கட்டியாக காய்ந்து எரிந்தது போல் காணப்படும். முதலில் வயலில் இருந்து தண்ணீரை வடிக்க வேண்டும். முதிர்ந்த பயிராக இருப்பின் பட்டம் பிரிந்து சூரிய வெளிச்சம் மற்றும் காற்றோட்டத்தை அதிகப்படுத்த வேண்டும். வயலில் எப்போதும் நீர் மறைய நீர் கட்ட வேண்டும். ஏக்கருக்கு பரிந்துரைக்கப்படும் மேலுரமாக 22 கிலோ யூரியா உரத்திற்கு மேல் எக்காரணம் கொண் டும் இடக்கூடாது. புகை யான் நடமாட்டம் அதிக மாக தென்படும் இடங்களில் தழைச்சத்து கொடுக்கவல்ல யூரியா உரத்தை மேலுரமாக இடாமல் இருப்பதே நல்லது. புகையான் பூச்சிகளின் மறுபெருக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ரசாயன பூச்சிக்கொல்லிகளை கண்டிப்பாக தெளிக்கக்கூடாது. புகை யான் பூச்சிகளின் தாக்குத லை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு அசாடிராக்டின் 500மிலி அல்லது இமிடாகுளேபிரிட் 100 மிலி அல்லது

அசிபேட் 250 கிராம் அல்லது தயாமிக்தாஸின் 100 கிராம் இவற்றில் ஏதேனும் ஒரு பூச்சி கொல்லி மருந்தினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தூரின் அடிப்பகுதியில் நன்கு நனையும்படி பூ நாசில் பயன்படுத்தி தெளிக்க வேண்டும் என தெரிவித்தனர்.

## வெள்ளரியின் மகிமை தெரியுமா?

சாலட் தயாரிப்பிலும் வெள்ளரி சுவையூட்டும் பொருளாக பயன்படுகிறது. ஊறுகாய் தயாரிக்கலாம். சமைத்தும், பச்சையாகவும் உண்ணலாம். கோடையில் உண்டால் உடலுக்கு குளுமை கிடைக்கும். உடலில் பித்தத்தை குறைக்கும். ஜீரணத்திற்கு உதவி செய்யும். தாகம் தணிக்கும். ஒவ்வாமையை தடுக்கும். மற்ற காய்கறி, தானியங்கள், கொட்டைகளுடன் வெள்ளரியை சேர்த்து உண்டால் அவற்றின் சத்துக்கள் மேம்படும். வழக்கமாக தக்காளி, முள்ளங்கி, கேரட்டுடன் சாலட் செய்யவும் பயன்படும். சாலட் வகையுடன் தயிர் சேர்த்து உண்டால் அது ஊட்டச்சத்து மிக்க சுவையான உணவாகிவிடும். தினமும் இரண்டு வெள்ளரி சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் என்ற பேச்சுக்கே இடமிருக்காது. இது ஒரு நம்பகமான மலமிளக்கி. கீழ்வாதத்தால் அவதிப்படும் நோயாளிகளுக்கு வெள்ளரி சாற்றுடன் கேரட், பீட்ரூட் சாறும் கலந்து கொடுத்தால் நல்ல பலன் கிடைக்கும். வெள்ளரி பழச் சாற்றுடன் உப்பு அல்லது சர்க்கரையை கலந்து பருகினால் தாகம் தணிந்து புத்துணர்ச்சி உண்டாகும். வெள்ளரி விதைகளை உலர்த்தி தோலை பிரித்தெடுத்தால் உள்ளிருக்கும் பருப்பை மருந்தாக பயன்படுத்த முடியும். காய்ச்சிய பாலில் வெள்ளரி விதைகளை ஊற வைத்து தேன் கலந்து உண்டால் உடம்புக்கு வலிமை கிடைக்கும்.

## நெற்பயிர் வளர்ச்சியை அதிகரிக்க ஜிங்சல்பேட் பயன்படுத்தலாம்

திருவாடானை, : திருவாடானை வேளாண்மை உதவி இயக்குனர் நாகரா ஜன் விடுத்துள்ள அறிக்கை: திருவாடானை வட்டாரத்தில் தற்போது

சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர்கள், உரம் பற்றாக்குறையால் போதிய வளர்ச்சி இல்லாமல் மஞ்சள் நிறமாக காட்சி அளிக்கின்றன. இதற்கு நுண்நூட்டம் ஏக்கருக்கு 5 கிலோ, ஜிங்சல்பேட் 10 கிலோ வீதம் 50 கிலோ மணலுடன் கலந்து இட வேண்டும். இதற்காக திருவாடானை வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் மானிய விலையில் ஜிங்சல்பேட் வழங்கப்பட்டு வருகிறது. இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தொழில் நுட்ப ஆலோசனைகளுக்கு களப்பணியாளர்களை விவசாயிகள் அணுகலாம். அல்லது, வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலக தொலை பேசி எண் 04561- 254080, 254340ல் தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்களை நிவர்த்திசெய்து கொள்ளலாம்.

**<u>சங்கரன்கோவிலில் 3ம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்</u>**

நெல்லை, : சங்கரன்கோவில் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் 3ம் தேதி காலை 11 மணிக்கு ஆர்டிஓ தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடக்கிறது. நெல்லை, பாளை, சங்கரன்கோவில் பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் பயன்பெறும் வகையில் விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் நீர்பாசன சங்க தலைவர் கள் தவறாது கலந்துகொண்டு விவசாயம் தொடர்பான கருத்துக் களையும் கோரிக்கை மனுக்களையும் அளிக்க லாம் என மாவட்ட கலெக் டர் கருணாகரன் தெரிவித்துள்ளார்.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**முல்லைப்பெரியாறு நீர்மட்ட உயர்வுக்கு எதிரான கேரளாவின் மறு ஆய்வு மனு மீது சுப்ரீம் கோர்ட்டில் இன்று விசாரணை**



புதுடெல்லி, முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடிக்கு உயர்த்தலாம் என்ற தீர்ப்பை எதிர்த்து கேரள அரசு தாக்கல் செய்த மறு ஆய்வு மனு சுப்ரீம் கோர்ட்டில் இன்று விசாரணைக்கு வருகிறது.

<u>நீர்மட்டத்தை உயர்த்தலாம்</u>

முல்லைப்பெரியாறு அணை தொடர்பான வழக்கில் கடந்த மே 7–ந்தேதி சுப்ரீம் கோர்ட்டில் அப்போதைய தலைமை நீதிபதி ஆர்.எம்.லோதா மற்றும் நீதிபதிகள் எச்.எல்.தத்து, சந்திரமவுலிகுமார் பிரசாத், மதன் பி.லோகுர், எம்.ஒய்.இக்பால் ஆகியோர் அடங்கிய அரசியல் சாசன பெஞ்ச் தீர்ப்பு வழங்கியது. நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடிக்கு உயர்த்தலாம் என்றும், இந்தப் பணியை கண்காணிக்க 3 பேர் கொண்ட கண்காணிப்பு குழுவை அமைக்கவும் நீதிபதிகள் உத்தர விட்டனர்.

<u>மனு விவரம்</u>

சுப்ரீம் கோர்ட்டின் இந்தத் தீர்ப்பை எதிர்த்து கடந்த ஜூன் 30–ந்தேதியன்று கேரள அரசு மறுஆய்வு மனு தாக்கல் செய்தது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:–

சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின்படி அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்துவது அணையின் பாதுகாப்புக்கு தீங்கு விளைக்கும். அணையின் பாதுகாப்பை உறுதி செய்யாமல் நீர்மட்டத்தை உயர்த்துவது குறித்த முடிவை ஏற்க முடியாது. தாழ்வான படுகைகளில் வசிக்கும் ஏறத்தாழ 40 லட்சம் மக்களின் பாதுகாப்பை இந்தத் தீர்ப்பு கவனத்தில் கொள்ள வில்லை. இந்த அணையின் பாதுகாப்பு குறித்தும், கேரள மக்களின்

நேர்மையான ஆதங்கம் குறித்தும் இந்தத் தீர்ப்பு கருத்தில் கொள்ளவில்லை. இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

<u>இன்று விசாரணை</u>

இந்த மனுவின் மீதான விசாரணை இன்று பிற்பகல் சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி எச்.எல்.தத்து மற்றும் நீதிபதிகள் ஜே.செல்லமேஸ்வர், மதன் பி.லோகுர், எம்.ஒய்.இக்பால், சி.நாகப்பன் ஆகியோர் அடங்கிய பெஞ்ச் முன்பு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரியவருகிறது.

## <u>புல்லேரி கிராமத்தில் 37 பேருக்கு விலையில்லா ஆடுகள்</u>



கல்பாக்கம், கல்பாக்கம் அடுத்த புல்லேரி கிராமத்தில் தமிழக அரசின் விலையில்லா ஆடுகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு திருக்கழுக்குன்றம் ஒன்றிய அ.தி.மு.க. செயலாளர் எஸ்.ஆறுமுகம் தலைமை தாங்கினார். கால்நடை மருத்துவர் ஹேமாவதி முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் கமலா தாமோதரன் வரவேற்றார். இதில் மாவட்ட செயலாளர் குமாரசாமி கலந்து கொண்டு புல்லேரி ஊராட்சிக்கு உட்பட்ட 37 பயனாளிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா ஆடுகளை வழங்கினார். இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## <u>வாத்து பண்ணைகளில் கால்நடை பராமரிப்பு துறை அதிகாரிகள் திடீர் ஆய்வு</u>



நொய்யல், பறவை காய்ச்சல் எதிரொலியால் தவுட்டுப்பாளையம் பகுதிகளில் உள்ள வாத்து பண்ணைகளில் கால்நடை பராமரிப்பு துறை

அதிகாரிகள் திடீர் ஆய்வு செய்தனர். திடீர் ஆய்வு கரூர் மாவட்டம், என்.புகழூர் ஊராட்சி தவுட்டுப்பாளையம் மற்றும் பாலத்துறை பகுதிகளில் கேரளா மற்றும் ஆந்திரா போன்ற வெளி மாநிலங்களில் இருந்தும், வெளி மாவட்டங்களில் இருந்தும் அதிக அளவில் வாத்துகளை வாங்கி பண்ணை அமைத்து வளர்த்தும், வாத்து இறைச்சிகளையும், சமைத்த கறிகளையும் விற்பனை செய்து வரு கின்றனர். இப்பகுதியில் உள்ள ஓட்டல்கள் வாத்து கறிகளுக்கு பெயர் பெற்றது. இந்நிலையில் கேரளாவில் வாத்து, கோழிகளுக்கு பறவைகாய்ச்சல் பரவியுள்ள தால் கலெக்டர் ஜெயந்தியின் உத்தரவின் பேரில் மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை சார்பில் ஆய்வு மேற்கொள்ள வலியுறுத்தப்பட்டது. இதன் படி மண்டல இணை இயக்குனர் டாக்டர் பழனிவேலு தலைமையில் மண்டல உதவி இயக்குநர்கள் குழந்தைசாமி, முருகேசன் மற்றும் கால்நடை மருத்துவர்கள் கல்பனா, சுதா ஆகியோர் கொண்ட குழுவினர் தவுட்டுப்பாளையம் மற்றும் பாலத்துறை தேசிய நெடுஞ்சாலையில் செயல்பட்டு வரும் வாத்து பண்ணைகள் மற்றும் வாத்துக்கறி விற்பனை செய்து வரும் ஓட்டல்களிலும் திடீர் ஆய்வு மேற்கொண்டனர். பரிசோதனை மேலும் அங்குள்ள வாத்துக்களின் ரத்த மாதிரிகள் எடுக்கப்பட்டு வாத்துகளில் பறவை காய்ச்சல் பரவி உள்ளதா? என அறிய ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. கேரளாவில் வாத்துகளுக்கு பறவை காய்ச்சல் பரவி உள்ளதால் வெளி மாநிலங்களில் இருந்து வாத்து, கோழி மற்றும் பறவை வகைகள், முட்டைகளை இறக்குமதி செய்ய கூடாது. தங்களுக்கு தேவைப்படும் வாத்து, கோழிகளை உள்ளூர் பகுதிகளிலேயே வாங்கி பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கறிகளை குளிர் சாதனப்பெட்டிகளில் வைத்து இருந்து விற்பனை செய்ய கூடாது என்று அதிகாரிகள் குழுவினர் ஆலோசனை தெரிவித்தனர்.

# <u>கால்நடை வளர்ப்போர் பயன்படுத்தி கொள்ள வேண்டும் கலெக்டர் முனுசாமி பேச்சு</u>



சிக்கலில் நடைபெற்ற முகாமில் ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்தை கலெக்டர் முனுசாமி வழங்கியபோது எடுத்தபடம்.

நாகப்பட்டினம், அரசின் சிறப்பு முகாம்களை கால்நடை வளர்ப்போர் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்று கலெக்டர் முனுசாமி கூறினார்.

குடற்புழுநீக்கமுகாம்

நாகை மாவட்டம், சிக்கல் ஊராட்சியில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் கால்நடைகளுக்கான இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம் நடைபெற்றது. முகாமில் மாவட்ட கலெக்டர் முனுசாமி கலந்து கொண்டு, வெள்ளாடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்தினை வழங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழக அரசு கால்நடைகளை பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கால்நடை மருந்தகங்கள் இல்லாத ஊர்களில் உள்ள கால்நடைகளை எவ்வித நோயும் தாக்கக்கூடாது என்பதற்காக மாதந்தோறும் அனைத்து ஊராட்சிகளிலும் கால்நடை சிறப்பு மருத்துவ முகாம் நடத்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில், நாகை மாவட்டத்தில் உள்ள 434 ஊராட்சிகளிலும் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம்கள் 2 நாட்கள் நடைபெற்றுள்ளது. ஒரு சில கிராமங்களில் இருந்து கால்நடை மருத்துவமனை, கால்நடை மருந்தகம் சற்று தொலைவில் இருக்கும். அங்கு கால்நடைகளை கொண்டு செல்வதற்கு சிரமமாக இருக்கும் என்பதால் அனைத்து ஊராட்சிகளிலும் இம் முகாம்கள் நடைபெற்றது.

சிறப்பு முகாம்கள்

அரசின் சிறப்பு முகாம்களை கால்நடை வளர்ப்போர் மற்றும் விவசாயிகள்

பயன்படுத்தி கொண்டு கால்நடைகளை பாதுகாத்திட வேண்டும். இச்சிறப்பு முகாம்கள் மூலம் நாகை மாவட்டம் முழுவதும் உள்ள சுமார் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் பயன்பெற்றன. இவ்வாறு அவர் கூறினார். முகாமில் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் (பொறுப்பு) நாகராஜன், உதவி கலெக்டர் சிவப்பிரியா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அண்ணாதுரை, தாசில்தார் நாராயணசாமி, உதவி இயக்குநர் (பொறுப்பு) அருணாச்சலகனி, கால்நடை உதவி மருத்துவர் லாரன்ஸ், கால்நடை ஆய்வாளர்கள் பாரிவேந்தன், செந்தில்குமார், செந்தில், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் நல்லதம்பி, ஜெயசித்ரா உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## திருவாரூர் மாவட்ட பகுதிகளில் 4-வது நாளாக மழை

திருவாரூர், வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது. இதனால் திருவாரூர் மாவட்டத்தில் நேற்று 4-வது நாளாக மழை பெய்தது.

காற்றழுத்ததாழ்வுபகுதி

வங்க கடலின் தென்மேற்கு பகுதியில் இலங்கை மற்றும் மன்னார் வளைகுடா பகுதி களுக்கு இடையே உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை, குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாற்றம் அடைந்தது. இதன்காரணமாக திருவாரூர் மாவட்ட பகுதி களில் கடந்த 28-ந் தேதி அதி காலை பெய்ய தொடங்கிய மழை நேற்று 4-வது நாளாக நீடித்தது. சில மணிநேர இடைவெளி விட்டு பெய்து வரும் சாரல் மழையால் திருவாரூர் நகர பகுதிகளில் நேற்று வாரத்தின் முதல் வேலைநாள் என்ற போதிலும் மக்கள் நடமாட்டம் வெகுவாக குறைந்து இருந்தது.

மழைநிலவரம்

முத்துப்பேட்டையில் நேற்று காலை ஒரு மணிநேரம் பலத்த மழை

பெய்தது. திருத்துறைப் பூண்டியில் நேற்றுமுன்தினம் இரவு தொடங்கிய சாரல் மழை, நேற்று மதியம் வரை பெய்தது. இதேபோல் நன் னிலம், நீடாமங்கலம் பகுதி களிலும் பரவலாக மழை பெய் தது. நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி ஆகிய இடங்களில் அதிகபட்சமாக 4 மில்லி மீட்டர் மழை பெய்தது. மாவட்டத்தின் மற்ற பகுதி களில் பெய்த மழை அளவு விவரம் மில்லி மீட்டர் அளவு களில் வருமாறு:- குடவாசல்-3, நன்னிலம்-3, திருவாரூர்-2, நீடாமங்கலம்-2, வலங்கைமான்-2. மாவட்டம் முழுவதும் பதி வான மொத்த மழை அளவு 20 மில்லி மீட்டர் ஆகும். சராசரியாக 2 மில்லி மீட் டர் மழை பதிவாகி இருந்தது குறிப்பிடத்தக்கது.